**சுருக்கம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – கடலூர் மாவட்டம் – குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 67 வழியோர குடியிருப்புகள் மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்– அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ2) துறை**

**அரசாணை (நிலை) எண்.30** **நாள். 2.03.2009.**
**மாசி 18, திருவள்ளுவர் ஆண்டு 2040.**
**படிக்கப்பட்டது.**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடித எண்.கோ.121 குடியிருப்பு ம கிள்ளை/இநிபொ6/திமேபி/08 நாள் 2.3.2009.

----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கடலூர் மாவட்டத்தில் குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 67 வழியோர குடியிருப்புகள் மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் வழங்கக் கோரும் செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்படி கூட்டுக்குடிநீர்த்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்படும் பகுதியின் 2001ம் வருட கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை, 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு 23295ம், 67 வழியோர குடியிருப்புகளுக்கு 30387ம் மற்றும் கிள்ளை பேரூராட்சியில் 10196 முறையே ஆகும். அடிப்படை ஆண்டு, இடைக்காலம் மற்றும் உச்ச கால மக்கள்தொகை மற்றும் குடிநீர்த்தேவை பின்வருமாறு.

| விவரம் | 2001ம் ஆண்டு | அடிப்படை ஆண்டு (2010) | இடைக் காலம் (2025) | உச்ச காலம் (2040) |
|---|---|---|---|---|
| 121 குடியிருப்புகள் | 53682 | 56585 | 62245 | 67902 |
| கிள்ளை பேரூராட்சி | 10196 | 10500 | 11500 | 12500 |
| மொத்த மக்கள் தொகை | 63878 | 67085 | 73745 | 80402 |
| நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு, தரம்பாதிக்கப்பட்டகுடியிருப்புகளுக்கு 40 லி, வழியோர குடியிருப்புகளுக்கு 30 லி, மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கு 70 லி, எனவும் கணக்கிட்டு 10 விழுக்காடு நீரிழப்புடன் மொத்த குடிநீர்த்வேை |  | நாளொன்றுக்கு 2.99 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 3.27 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 3.55 மில்லியன் லிட்டர் |

3. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு 2.3.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வாரிய பரிந்துரையை ஏற்று தனது தீர்மானம் எண்.4, நாள் 2.3.2009–ல் கடலூர் மாவட்டத்தில் குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 67 வழியோர குடியிருப்புகள் மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், அமைப்புச் செலவு ரூ.15.16 கோடி, வருட பராமரிப்பு செலவு ரூ.21.28 இலட்சம், தனி நபர் திட்ட செலவு ரூ.2260/– மற்றும் 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு ரூ.14.71 எனவும், இத்திட்டத்தை விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் வழங்கல் திட்டம்/ குறைந்தபட்ச தேவை திட்டம் மற்றும் உள்ளாட்சி / பொதுமக்கள் பங்குத் தொகை ஆகிய நிதி ஒதுக்கீட்டுடன் பின்வரும் நிதி பகுப்பின்படி செயலாக்கவும், நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

| பயனாளிகள் | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சங்களில்) | | | | மொத்தம் (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|---|---|
| | வி.ஊ.கு.வ திட்டம் | | கு. தே திட்டம் | உள்ளாட்சி / பொதுமக்கள் பங்குத் தொகை | |
| | மத்திய அரசு | மாநில அரசு | | | |
| | 75% | 25 % | 80% | 20% | |
| 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 67 வழியோர குடியிருப்புகள் | 756.92 | 393.41 | – | – | 1150.33 |
| கிள்ளை பேரூராட்சி | – | – | 292.64 | 73.03 | 365.67 |
| **மொத்தம்** | **756.92** | **686.05** | | **73.03** | **1516.00** |

இதனடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்று கடலூர் மாவட்டத்தில் குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 67 வழியோர குடியிருப்புகள் மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், அமைப்புச் செலவு ரூ.15.16 கோடி, வருட பராமரிப்பு செலவு ரூ.21.28 இலட்சம், தனி நபர் திட்ட செலவு ரூ.2260/– மற்றும் 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு ரூ.14.71 எனவும், இத்திட்டத்தை விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் வழங்கல் திட்டம் / குறைந்தபட்ச தேவை திட்டம் மற்றும் உள்ளாட்சி/ பொதுமக்கள் பங்குத் தொகை ஆகிய நிதி ஒதுக்கீட்டுடன் பின்வரும் நிதி பகுப்புடன் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| பயனாளிகள் | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சங்களில்) | | | | மொத்தம் (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|---|---|
| | வி.ஊ.கு.வ திட்டம் | | கு. தே திட்டம் | உள்ளாட்சி / பொதுமக்கள் பங்குத் தொகை | |
| | மத்திய அரசு | மாநில அரசு | | | |
| | 75% | 25 % | 80% | 20% | |
| 54 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 67 வழியோர குடியிருப்புகள் | 756.92 | 393.41 | – | | 1150.33 |
| கிள்ளை பேரூராட்சி | | | 292.64 | 73.03 | 365.67 |
| **மொத்தம்** | **756.92** | **686.05** | | **73.03** | **1516.00** |

//ஆளுநரின் ஆணைப்படி//

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–9.
ஊரக வளர்ச்சி ஆணையர், பனகல் கட்டிடம், சென்னை–15
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–108.
மாவட்ட ஆட்சியர், கடலூர்.
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையர் மூலமாக)
நகல்:
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதிஅமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொது (நூலகம்) துறை, சென்னை–9.
நிதி ந.நி,(ம) கு,வ, (அநமு2)குவ2 /குவ3/குவ4.வசெ துறை, சென்னை–9
இகோ/உநகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.